வியாழக் கிழமை, 1970 மார்ச் 26

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினுக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினுக்கள்.

Kuzhiturai Sub-Registrar's Office.

*540 Q.—Thiru N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state:

(a) whether furniture belonging to the Sub-Registrar's Office, Kuzhiturai near Nagercoil has been attached for non-payment of municipal taxes during 1968-69; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குறிப்பிட்ட ஆண்டில் இல்லாவிட்டாலும், இதற்குப் பின்னுலோ முன்னுலோ இது மாதிரியான நிகழ்ச்சி அங்கு ஏற்பட்டிருக்கிறதா? ஏற்பட்டிருந்தால் என்ன காரணம்?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, நாகர்கோயிலுக்கு அருகிலுள்ள குழித்துறை துணை ஆவணப் பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தமான மேசை நாற்காலி வகைகள் நகராட்சி வரி செலுத்தாத காரணத்தால் ஜப்தி செய்யப்படவில்லை. மார்ச்சு 1968-ல் குழித்துறை நகராட்சி ஆணையாளர் 1967–68 இரண்டாவது அரையாண்டிற்கான வரி ரூ. 127-ஐச் செலுத்த வேண்டும் என்று மார்த்தாண்டம் துணைப்பதிவாளருக்கு அறிவித்திருந்தார். அதன் பின்னர் நகராட்சி ஆணையாளர் மாவட்டப் பதிவாளரைச் சந்தித்து மேற்படி வரி பாக்கி பற்றிப் புகார் செய்தார். மேற்படி வரிக்கான கேட்பு (டிமாண்டு நோட்டிஸ்) காலாகாலத்தில் வராததினுல், வேண்டிய நிதியை ஆவணப் பதிவுத்துறைத் தலைவரிடமிருந்து பெற முடியவில்லை என்பதனை நகராட்சி ஆணையாளருக்கு மாவட்டப் பதிவாளர் எடுத்துச் சொன்னுர். எப்படியும் வரி பாக்கியை உடனே செலுத்திவிட வேண்டும் என்று நகராட்சித் தலைவர் சொன்னதன்பேரில் பதிவுத்துறைத் தலைவரிடமிருந்து நிதி பெற வேண்டியிருப்பதால் சிறிது காலவரை வேண்டுமென்றும், மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டாமென்றும் மாவட்டப் பதிவாளர் எழுத்துமூலம் கேட்டுக்கொண்டார். அப்படியிருந்தும், 1968-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 30-ம் நாள் நகராட்சி அதிகாரிகள் துணைப் பதிவாளர் அலுவலகத்திலிருந்த மேசை நாற்காலி வகையறுக்களை ஜப்தி செய்து 1968-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5-ம் தேதிக்குள் வரி பாக்கி செலுத்தப் படாவிட்டால் சாமான்கள் ஏலத்தில் விடப்படும் என்றும் கூறிச் சென்றனர். குழித்துறை நகராட்சி ஆணையாளர் எடுத்துக்கொண்ட நடவடிக்கை சட்டப் பூர்வமாக நியாயமாக இருந்தாலும்கூட அரசின் ஒரு துறையினர் வேறு ஒரு துறையின்மீது கடும் நடவடிக்கை எடுத்தது விரும்பத்தக்கதல்ல என்றும், கடும் நடவடிக்கை எடுத்ததற்குப்பதிலாக இச்செய்தியை

மேலதிகாரிகளுக்குத் தெரிவித்திருக்க வேண்டுமென்றும் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. அதன்பேரில், இது சம்பந்தமாக ஒரு பொது உத்திரவு பிறப்பிக்கக் கிராம முன்னேற்ற உள்ளாட்சி இலாக்கா நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நகராட்சியிலே டிமாண்டு நோட்டிஸ் கொடுக்கப்பட்டிருப்பதாக நகராட்சித் தலைவர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆனால், அதே நேரத்தில, அது வந்து சேரவில்லை என்று சொன்னார்கள். இது முறையாகச் சேர்க்கப் பட்டதா என்று அறிய விரும்புகிறேன். அப்படிச் சேர்க்கப்படவில்லையென்றால் அதற்குச் சம்பநதப்பட்டவர் யார்? அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: அது முறையாகத்தான் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அதற்கான நிதியைப் பெறுவதற்கு தலைமை அதிகாரியிடத்திலிருந்து அனுமதி பெறவேண்டும் என்ற காரணத்தினால் தாமதம் ஏற்பட்டிருக்கிறது.

THIRU K. VINAYAKAM: Sir, as a general rule, all the Government buildings and other allied buildings are exempt from municipal taxes if they apply for it. Have the Government taken any steps in this matter to apply for such exemption? I mean, have any steps been taken by the Sub-Registrar's Office, Kuzhiturai for exemption from municipal tax for its buildings?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: கனம் உறுப்பினரின் யோசனையை அரசு பரிசீலனை செய்யும். குழித்துறை துணைப்பதிவாளர் அலுவலக சார்பில் நகராட்சி வரி விலக்குபற்றி எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

Advertisement for products of Khadi Department.

*546 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Local Administration be pleased to state:

(a) whether the Khadi Department has been advertising its products through the A.I.R. Commercial broadcasts; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:

(அ) ஆம்.

(இ) வானொலியில் "தேன் கிண்ணம்" ஒலிபரப்பு நேரத்தில் பின் வரும் ஒரு குறிப்பிட்ட நேர விளம்பரம் 3-11-69-லிருந்து 21-1-70 வரை தமிழக கதர் கைத்தொழில் வாரியத்தால் ரூ. 3,980 செலவில் தரப் பட்டது.

பாட்டு:

"அண்ணல் காட்டிய அறவழி காத்திட
எண்ணற்ற நூற்பாளர் இனிதாய் வாழ்ந்திட
வாங்கிடுவீர் கதரே! கதரே!

உரைநடை:

காதி கிராப்ட், திருச்சி எம்போரியம்
தமிழ் நாடு அரசு காதி நிலையங்களில் கதர் வாங்குங்கள்.
தீபாவளிக்கு பத்து சதவிகிதம் தள்ளுபடி உண்டு.

இந்த உரைநடை 3-11-1969-லிருந்து 8-11-1969 வரை ஒலிபரப்பப் பட்டது.